JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **7/2021** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 1** | Prosecution /Defence / Court | |
| Name | இளங்கோ | Village | பனிக்கம்பாளையம் |
| Father's Name | பழனிச்சாமி | Taluk | |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 08.07.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு எலக்ட்ரிக்கல் வேலை செய்து வருகிறேன். 10.09.2019 ம் தேதி மாலை 5.30 மணி சுமாருக்கு பெருந்துறையிலிருந்து வாய்க்கால் மேடுக்கு சென்று கொண்டிருக்கும் போது செட்டித்தோப்பு பேருந்து நிறுத்தம் அருகில் சென்ற போது ஜெகநாதனும், ஜெகநாதனின் அப்பா சண்முகமும் பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தார்கள். ஈரோட்டிலிருந்து பெருந்துறை நோக்கி வேகமாக இருசக்கர வாகனத்தில் வந்த அவர் இருசக்கர வாகனத்துடன் பேருந்து நிறுத்தத்தில் நின்றிருந்த சண்முகத்தின் மீது மோதியதில் சண்முகத்துக்கு காலிலும், கையிலும் பலத்த காயம் ஏற்பட்டு அந்த இடத்திலேயே கீழே விழுந்து விட்டார். இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்திய நபர் பெயர் ஹரிஹரன் ஆஜரில் உள்ள எதிரி ஆவார்.

2. தனியார் ஆம்புலன்ஸ் மூலம் பெருந்துறை KMC மருத்துவமனைக்கு முதலுதவி சிகிச்சைக்கு சேர்ப்பதற்காக அவரது மகன் அழைத்துச் சென்றார். அன்றையதினம் 6.00 மணிக்கு பெருந்துறை காவல் நிலையத்திற்கு வந்து எழுத்து மூலமான புகார் கொடுத்து விபத்து ஏற்படுத்தியவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டேன். **புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னை பெருந்துறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் புகார் கொடுத்த அன்று விசாரித்தார். அதன் பின்னர் KMC மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சண்முகம் மாலை 6.30 மணியளவில் சிகிச்சை பலனளிக்காமல் இறந்து போய் விட்டார். பெருந்துறை அரசு மருத்துவமனையில் சண்முகத்தின் பிரேதத்தின் மீது பெருந்துறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் பிரேத விசாரணை மேற்கொண்ட போது நான் உடனிருந்தேன். பிரேதத்தை அடையாளம் காட்டினேன். என்னை பெருந்துறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் பிரேத விசாரணை மேற்கொண்ட அன்றும் 11.09.2019 ம் தேதி மறுபடியும் விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** நான் எலக்ட்ரீசியன் வேலை கடை வைத்து நடத்தி வருகிறேனா என்றால் இல்லை வாடிக்கையாளர்கள் எனக்கு போனில் தகவல் சொன்னால் சென்று சரி செய்து வருவேன். இறந்து போன சண்முகம் எனக்கு பழக்கம் என்றால் சரிதான். பத்து ஆண்டுகளாக எனக்கு பழக்கம். அ.சா.ஆ.1 புகாரில் என்ன வேலையாக சென்றேன் எந்த வண்டியில் சென்றேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். இறந்து போன நபருக்கு என்ன வயது இருக்கும் என்றால் 65 லிருந்து 70 வயது இருக்கும். சம்பவ இடத்திற்கு கிழமேல் ரோட்டில் பேருந்து நிறுத்தம் இரு பக்கங்களிலும் உள்ளது என்றால் சரிதான். சம்பவ சாலை போக்குவரத்து அதிகம் உள்ள சாலை என்றால் சரிதான். சம்பவ சாலை ஈரோடு கோயம்புத்தூர் திருப்பூர் காங்கயம் , கோபி உள்ளிட்ட சாலைகளை இணைக்கக்கூடிய முக்கிய சாலை என்றால் சரிதான்.

2. சம்பவ இடத்திற்கு வடபுறம் விபத்தில் இறந்து போனவரின் வீடு உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த சாலையின் அகலம் எவ்வளவு அடி இருக்கும் என்றால் 15 அடி அகலம் இருக்கும். தார் ரோட்டின் பக்கத்தில் மண் ரோடு உள்ளது என்றால் சரிதான். மண் ரோடு 5 அடி இருக்கும் என்றால் சரிதான். விபத்து

மையப்பகுதியில் நடந்ததா அல்லது டிவைடர் உள்ள பகுதியில் நடந்ததா என்று குறிப்பிட்டு என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். விபத்து நடந்து விபத்து சத்தம் கேட்டு நான் போய் பார்த்தேன் என்றால் சரிதான் நான் தான் முதலாளாக சென்றேன். விபத்தில் இறந்து போனவரின் மகன் எனக்கு பழக்கம் என்றால் சரிதான். ஜெகன், நவீன் இருவரும் நானும் நண்பர்கள் என்றால் சரிதான். விபத்தில் இறந்து போனவர் சண்முகம் ரோட்டை கடந்தார் என்றால் அவர் கடந்தாரா என்று எனக்கு தெரியாது.

3. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும் சம்பவத்தை பார்க்கவில்லை என்றும் சண்முகத்தின் மகன் எனக்கு பழக்கம் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகாரில் நான் கேஎம்சி மருத்துவமனை சென்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ. 1 புகாரில் இடைச்செறுகலாக திசை எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ இடம் எனக்கு தெரியாததால் தான் அவ்வாறு இடைச்செறுகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை